பாரதி/அரவிந்தர் இல்ல மாணவர் சங்கம்
பொன்னி
கல்வியே கருந்தனம்

இதழ் - 01
2017



அரும்பு

"அரும்பு"

இதழ் - 01

2017

யா/கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்

கலவன் பாடசாலை

வரணி

2017.12.05

நூல் விபரம்

நூலின்பெயர் :- அரும்பு

ஆலோசனையும் வழிகாட்டலும் :- திரு.க. இளங்கோவன் (அதிபர்)

இதழாசிரியர் :- செல்வி. சசிலதா சண்முகம்

வெளியீடு :- கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை
வரணி

காலம் :- 2017

பிரதிகள் :- 150

அளவு :- A5

பக்கங்கள் :- i - xii + 38

கணினி வடிவமைப்பு :- செல்வி. தி.பரிஸ்ரா

தாள் :- 70Gsm

பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்துவோம் - எமை
வாழ வைத்து வாழ்க என்று வாழ்த்துவோம்.

(வாழ்க)

வரணியூரில் கரம்பைக்குறிச்சி கனிஷ்ட வித்தியாலயம்
வளமைமிக்க கலைகள் பலவும் கற்றுத்தரும் ஆலயம் - அதை

(வாழ்க)

செந்நெல் வயலும் தென்னை பனையும்
சேர்ந்த குருக்கள் குடியிருப்பில்
மங்கலமுடன் மாணிக்க நாமத்தில்
தந்தது இந்து நிறுவனமாம்.

(வாழ்க)

அர்த்தமுள்ள நூல்களும் அரிய விஞ்ஞானமும்
பொருத்தமாக கணிதமும் பொலியும் நல்ல கலைகளும்
விருப்பினோடு தொழில்களும் விரும்பி ஓங்கும் சமயமும்
பொறுப்பினோடு கற்று நாம் புவியில் இன்பம் காணுவோம்.

(வாழ்க)

எண்ணிய நாம் எண்ணியவாறு எய்தவழி காணுவோம்
கண்ணியமாய் காலமெல்லாம் கடமைதனைப் பேணுவோம்
நுண்ணிதான அறிவுடனே திறமை கொண்டு வாழுவோம்
முன்னிதான இறைவனையும் போற்றி அன்பு கூறுவோம்.

(வாழ்க)

தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

அரும்பில் வியாபித்திருப்பவை...!

01. நான் விரும்பும் பெரியார்
02. கணினி
03. சமயோசித புத்தி - கதை
04. முயல் வேகம் - கதை
05. உண்மை உயர்வு தரும்
06. உயிர்காக்கும் மந்திரம்
07. நரியும் கழுதையும்
08. சிறுவர் தினம்
09. இளமைப் பெயர்
10. எதிர்க்கருத்துச் சொற்கள்
11. சிந்தனைக்குச் சில...
12. வாழ்க வளமுடன்
13. அம்மா - கவிதை
14. ஆச்சரியமான தகவல்கள்
15. துண்டுப்பிரசுரம்
16. பொதுஅறிவு
17. தொனிகள்
18. பழமொழிகள்
19. பாடல்
20. குளங்களும் அவற்றைக் கட்டுவித்த மன்னர்களும்
21. உலகின் மிகப்பெரியவை
22. பல்பொருள் ஒரு மொழி
23. எதிர்ப்பாற் சொற்கள்
24. மரங்கள்
25. நீர் - கவிதை

26. நாளைய தலைவர்களே உமக்காய் - கவிதை
27. முயற்சி திருவினையாக்கும் - கதை
28. துண்டுப்பிரசுரம்
29. சூழலைப் பாதுகாப்போம்
30. விடுகதை
31. ஒத்தகருத்துச் சொற்கள்
32. பழமொழிகளும் கருத்துக்களும்
33. நான் சென்ற சுற்றுலா
34. பொதுஅறிவு
35. இலங்கையின் நதிகளும் அவற்றின் பழைய பெயர்களும்
36. புன்னகைக்கும் பூக்கள்
37. எல்லாமே இரண்டு
38. பொதுஅறிவு
39. சேவல்
40. Action Song
41. இயல்து கரவேல் - கதை
42. காகத்தை ஏமாற்றிய நரி - கதை
43. பல வித்துக்களைக் கொண்ட பழங்கள்
44. இலங்கையின் முக்கிய தொலைபேசி இலக்கங்கள்
45. எனது ஊர் - මගේ ගම

அதிபரின் வாழ்த்துச் செய்தி...!

யா/ கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2017 ஆம் ஆண்டு தரம் - 04 இல் கல்வி பயிலும் மாணவர்களின் ஆக்கங்களைத் தன்னகத்தே சுமந்து வரும் **"அரும்பு"** என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாவைக் காண இருக்கும் கல்லூரித்தாயின் நீண்டகால வரலாற்றின்பின் **"அரும்பு"** என்னும் நூலில் தரம் - 04 மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவதனை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலையின் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்திற்குக் காலம் வெளிவரும் பாடசாலைச் சஞ்சிகைகள் அமைகின்றன. அந்தவகையில் பாடசாலையில் அபிவிருத்தியைச் சுட்டிக் காட்டுவதிலும் மாணவர்களை வழிப்படுத்தி, ஒழுங்குபடுத்தி மாணவர்களது ஆற்றல்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் இச்சஞ்சிகை வரலாற்று ஆவணமாக அமையும். பாடசாலை என்பதை வெறுமனே கட்டடத்தொகுதிகளைக் கொண்ட அமைப்பல்ல மாறாக ஒரு நாட்டின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான உயிரோட்டமுடைய செயற்பாடுகளை வழிநடத்தும் ஒரு நிறுவனமாகும். எனவே இச்செல்நெறிக்கேற்ப மாணவர்களை வழிப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க மாணவர்களை சமநிலை ஆளுமையுடையவர்களாகவும் எதிர்காலத்தில் சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளை

மேற்கொள்ள தமது ஆக்கங்களை வலுச்சேர்த்து தமது சிந்தனைக்கேற்ப தகவல்களைத் தொகுத்து வழங்கியுள்ளமை இச்சஞ்சிகையின் சிறப்பாக அமைந்துள்ளது. சவால்கள் நிறைந்த கல்வி உலகில் மாணவர்களை வழிப்படுத்தி பல சவால்களுக்கு மத்தியில் அவர்களை வழிப்படுத்தி இந்நூலைத் தொகுப்பதற்கு உதவிய ஆசிரியர் செல்வி.ச.சசிலதா அவர்களுக்கும், இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கிய தரம் - 04 அனைத்து மாணவர்களுக்கும், மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் இந்நூலுக்கான அனுசரணையை வழங்கிய பெரியதம்பி கங்காகரன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களிலும் இனிதே இச்சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் என விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிந்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை முதல்வர்
திரு. க. இளங்கோவன்

வாழ்த்துச் செய்தி...!

யா/ கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2017 ஆம் ஆண்டு தரம் - 04 இல் கல்வி பயிலும் மாணவர்களின் சுய ஆக்கங்களைத் தன்னகத்தே சுமந்து வரும் **"அரும்பு"** என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்களின் சுய ஆக்கத் திறன்களின் வளர்ச்சியை காலத்திற்குக் காலம் வெளிப்படுத்தும் சான்றிதழாக இச்சஞ்சிகை அமைகின்றது. எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்ளும் இயலுமை உடையதும், பண்புவிருத்தியுடன் கூடியதுமான சமூக ஒருமைப்பாடுடைய சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக இச்சஞ்சிகை உதவுகின்றது. மேலும் கல்வி உலகில் மாணவர்களின் அடிப்படை அறிவுடன் கணினி அறிவையும் வழங்கி சமவாய்ப்புடன் கூடிய மனித விழுமியங்களைப் பேணும் மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இச்சஞ்சிகை உதவும் முகமாக இந்நூலைத் தொகுப்பதற்கு வழிப்படுத்திய ஆசிரியர் செல்வி.ச.சசிலதா அவர்களுக்கும், இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கு ஊன்றுகோலாக இருந்த தரம் - 04 மாணவர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் இச்சஞ்சிகை தொடராக வெளிவர வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர்
திருமதி. உ. அருள்ச்செல்வம்

வாழ்த்துச் செய்தி...!

மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் தரம் - 04 மாணவர்களால் வெளியிடப்படும் **"அரும்பு"** என்ற சஞ்சிகை மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமுதாயத்திற்குப் பொருத்தமான ஆளுமை மிக்கவர்களாக உருவாக்கும் இச்சஞ்சிகையானது அவர்களது திறமைகளைக் கவிதையாக, பாடலாக, கட்டுரைகளாக, இன்னும் பல்வேறு வடிவங்களைத் தாங்கி வெளிவருகின்றது. **"அரும்பு"** என்னும் சஞ்சிகையின் பெயரானது மாணவர்களின் அறிவாற்றல்களின் வளர்ச்சிப் படியினையே எடுத்துக் காட்டுகின்றது.

இச்சஞ்சிகை அரும்புகள் மொட்டாகி மலர்வது போல் தமது சிந்தனைத் துளிகளைப் பதித்த பிஞ்சு உள்ளங்களின் கல்வியறிவு வளர்ச்சி பெற்று எதிர்காலத்தில் சிறந்த பெறுபேற்றை அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இவ் ஆக்கம் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர்
திருமதி. சி. திலகவதி

வாழ்த்துச் செய்தி...!

யா/ கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் - 04 மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கியவாறு முதன் முதலாக **"அரும்பு"** என்னும் பெயரில் வெளிவரும் இச்சஞ்சிகையானது மாணவர்களின் அறிவுத் தேடலின் ஒரு பரிமானமாகும்.

இளம்பிஞ்சுகளின் ஆக்கத்தைத் தாங்கிவரும் இவ்வேட்டிற்கு **"அரும்பு"** என்னும் பெயர் பெரிதும் பொருத்தப்பாடாகவே அமைகின்றது எனலாம். மாணவர்களின் எழுத்துருக்கள் அச்சுருவில் வெளிவருகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். ஏனைய மாணவர்களின் கற்றலுக்கு பயன்பெறும் வகையில் இச்சஞ்சிகை ஆக்கம் அமைந்துள்ளமை மற்றுமொரு சிறப்பாகும். இதன்மூலம் ஆரம்பக்கல்வி மாணவர்களின் அடிப்படைத் தேர்ச்சிகளான தொடர்பாடல் தேர்ச்சிகள், ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், கற்றலுக்காகக் கற்றல் போன்ற அடிப்படைத் தேர்ச்சிகள் பெரிதும் விருத்தியடையும் என எதிர்பார்க்கலாம். இவ்வாறான முயற்சியில் ஏனைய வகுப்பு மாணவர்களும் வருங்காலத்தில் ஈடுபடுவர் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

மாணவர்களின் திறமைகளுக்கும், படைப்பாற்றலுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் **"அரும்பு"** என்னும் இச்சஞ்சிகை தொடர்ந்து மேலும் சிறப்புக்களுடன் வெளிவரவேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர்
திரு. சி. பிரபாகரன்

வாழ்த்துச் செய்தி...!

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணியூரில் அமைந்துள்ள குருக்கள் குடியிருப்பில் ஆரம்பப் பிரிவு மாணவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள யா/ கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் - 04 இல் கல்வி பயிலும் மாணவர்களது ஆக்கங்களை **"அரும்பு"** என்னும் நாமத்துடன் வெளிவரும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

தரம் - 04 மாணவர்களின் ஆக்கங்களைச் சுமந்துவரும் சஞ்சிகையினை வாசிப்பதனூடாக அறிவையும், அனுபவத்தையும், கற்பனையையும் வளர்க்க உதவுகின்றது. எமது பாடசாலை மாணவர்களது ஆக்கங்களால் அலங்கரிக்கப்பட்டு வெளிவருகின்ற **"அரும்பு"** சஞ்சிகையானது இடரேதுமின்றி இனிதே வெளியிடவும் எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக வெளிவரவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர்
திருமதி. இ. கதிர்காமநாதன்

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

யா/ கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2017 ஆம் ஆண்டு தரம் - 04 இல் கல்வி பயிலும் மாணவர்களின் ஆக்கங்களை தன்னகத்தே சுமந்து வரும் **"அரும்பு"** என்னும் இச்சஞ்சிகையினை உங்கள் கரங்களிலே சமர்ப்பிப்பதையிட்டு நான் அகமகிழ்கின்றேன்.

"அரும்பு" என்னும் சஞ்சிகையானது ஒக்டோபர் 01 - 31 வரையான காலப்பகுதி தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதை முன்னிட்டு மாணவர்களால் வாசிக்கப்பட்டுள்ள விடயங்களை ஒன்றாகத் தொகுத்து அனைத்து மாணவர்களும் வாசிப்புத் திறனை விருத்தியடையச் செய்யும் நோக்கில் ஒரு பயன்மிக்க இதழாக வெளிவந்துள்ளதையிட்டு அகமகிழ்கின்றேன். இச் சஞ்சிகையின் வெற்றிக்கும் சாதனைக்கும் வழிகாட்டியாகத் துணைபுரிந்த பாடசாலை அதிபர் திரு.க. இளங்கோவன் அவர்கள் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவர். அத்துடன் நூலாக்கத்திற்கு தங்களாலான ஆக்கங்களைத் தந்துதவிய தரம் - 04 மாணவர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்கையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"அரும்பு" இன்று வெளியாகி நிற்பதற்கு வாழ்த்துச் செய்தியை வழங்கிய பாடசாலையின் முதல்வர், சிரேஷ்ர ஆசிரியர்கள், தரம் - 04 மாணவர்கள், கணினி வடிவமைப்பாளர் செல்வி.தி.பரிஸ்ரா அவர்களுக்கும், சஞ்சிகை வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கிய தரம் - 04 பெற்றோர் திரு.பெ.கங்காகரன் அவர்களுக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாவதுடன் எதிர்வரும் காலங்களிலும் இச்சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவர எல்லாம் வல்ல இறையருளைப்பெற்று விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து **"அரும்பினை"** உங்கள் கரங்களிலே சமர்ப்பிக்கின்றேன்.

இதழாசிரியர்
செல்வி.சசிலதா சண்முகம்

நன்றியுரை

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் 2017ம் ஆண்டு தரம் - 04இல் கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அந்த வகையில் எமது பாடசாலையின் முதல்வர் திரு. க. இளங்கோவன் அவர்களுக்கும் "அரும்பு" என்னும் பெயர் வடிவில் வெளிவரும் சஞ்சிகையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் அவர்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் "அரும்பு" சஞ்சிகை வெளிவருவதற்கு உசாத்துணை நூல்களை வழங்கியோருக்கும் சகலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பெரியோர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் சிறார்களாகிய நாம் நன்றிகளை கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.

யா/ கரம்பைக்குறிச்சி
அ.த.க பாடசாலை
தரம் - 04
மாணவர்கள்
2017

நான் விரும்பும் பெரியார்

1. நான் விரும்பும் பெரியாரின் பெயர் விபுலானந்த அடிகள்.

2. இவர் மீன்பாடும் தேன்நாடாம் மட்டகளப்பில் காரைதீவில் பிறந்தார்.

3. அவர் தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் பெரும் பணியாற்றினார்.

4. இவரது பணியானது 19ம் நூற்றாண்டில் தமிழ் வளர பெரும் பங்களிப்பு வழங்கியது.

5. இவரது தாய் தந்தை பெயர் சாமித்தம்பி கண்ணம்மையார் ஆகும்.

6. எனக்கு மிகவும் பிடித்த சைவப் பெரியார் இவராவர்.

செல்வி.க.பிரித்திகா
தரம் - 04

கணினி

1. இவ்வுலகில் கணினி என்ற வார்த்தையைக் கேட்காதோர் எவரும் இல்லை.

2. கணினி என்பது மனித வேலையினை இலகுபடுத்தும் ஓர் கருவியாகும்.

3. இன்று சிறுவர் முதல் பெரியவர் வரை இதனைப் பாவிப்பதை காணலாம்.

4. இன்றைய கணினிப் பாவனையினால் பல நன்மைகள் ஏற்படுவது மட்டுமல்லாமல் பல்வேறு துன்பங்களும் ஏற்படுகின்றது.

5. கணினியைப் பயன்படுத்துகையில் அதன் தொழில்நுட்பத் தன்மையினை அறிந்து பயன்படுத்தல் வேண்டும்.

செல்வன்.ஜெ.கஜீபன்
தரம் - 04

சமயோசித புத்தி

ஒரு குளத்தில் நீர் நிறைந்திருந்தது. இதனால் மீன்கள் எல்லாம் குதித்து விளையாடின. ஒரு சிறிய மீன் துள்ளித் துள்ளிப் பாய்ந்தது. இதை அவதானித்த ஒரு கொக்கு விரைவாக பறந்து சென்று "லபக் என்று அந்த சிறிய மீனை கௌவிக்கொண்டு பறந்தது. அகப்பட்ட சிறிய மீன் பயப்பட்டாலும் துணிவுடன் அன்புள்ள கொக்காரே இன்னும் சிறிது நேரத்தில் நீங்கள் என்னை உண்பீர்கள். நான் இறந்து விடுவேன். ஆனால் "எனக்கொரு கவலை கொக்கு "என்ன கவலை? எங்கள் குளத்தில் ஒரு அதிசய மீன் உண்டு. அது மிகவும் சுவையானது. நான் இறந்தால் அந்த அதிசய மீன் உங்களுக்கு கிடையாதே என்றது. இதனைக் கேட்ட கொக்கு அந்த சிறிய மீனை மீண்டும் குளக்கரையில் விட்டது. மீன் நீரில் நீந்திச் சென்றது.

செல்வன்.வி.சஞ்சிகன்
தரம் - 04

முயல் வேகம்

ஓநாயொன்று பசியுடன் வாடிக்கொண்டிருந்தது. அப்போது அந்த வழியால் முயல் வருவதைக் கண்டது. அதனை துரத்த ஆரம்பித்தது. ஆனால் முயலின் வேகத்திற்கு ஓநாயால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதைப்பார்த்த ஆட்டுக்குட்டி ஒன்று ஓநாயை ஏளனம் செய்தது. "ஒரு குட்டி முயல் மிக வேகமாக ஓடுகிறது. நீ எவ்வளவு பெரிய ஓநாய் உன்னால் அதன் வேகத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லையே "என்றது.

அதற்கு ஓநாய் சொன்னது "இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது நண்பனே?" நான் இரைக்காகத் துரத்துகிறேன். அதுவோ உயிர் பிழைப்பதற்காக வேகமாக ஓடுகிறது என்றது.

செல்வி.சு.கோயிதா
தரம் - 04

உண்மை உயர்வு தரும்

உண்மை பேசினால் உயர்வு கிடைக்கும். பொய் பேசினால் தாழ்வு கிடைக்கும். மனப்பூர்வமாக உண்மை பேசி வாழ்பவரின் பெரும் தவம் செய்பவனிலும் வலிமை படைத்தவனாவான்.

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை என்றார் வள்ளுவர்."

மனமறியப் பொய் செல்லாது வாழ்பவரின் வாக்கு "பொய்யாமை அன்ன புகழில்லை" என்பதை பொய்ப்பித்துக் காட்டியவர் காந்தி ஆவார். உண்மை பேசுவோனுக்கு மரணம் இல்லை. அவன் மரணித்த பின்பும் வாழ்வான் என்பதற்கு அரிச்சந்திரன் எடுத்துக் காட்டாகும்.

மனிதன் இவ்வுலகில் வாழும் போது உண்மை பேசி மற்றவர்களுக்குத் தீங்கின்றி வாழ வேண்டும். நாமும் உண்மை பேசும் உத்தமர்களாக உலகத்தில் வாழ்வோம்.

செல்வி.ர.திவ்வியா
தரம் - 04

சிறுகதை

உயிர்காக்கும் மந்திரம்

நரி பூனையிடம் தற்பெருமை பேசிக் கொண்டது. "எனக்கு பகைவர்களிடமிருந்து தப்பிக்க நூறு தந்திரங்கள் தெரியும் உனக்கு"

"எனக்கு ஒரே ஒரு மந்திரம் தான் தெரியும் என்றது பூனை. அப்போது பெரிதாக சத்தம் கேட்டது. ஓநாய்களும், வேட்டர்களும் துரத்தி வரும் இரைச்சல் கேட்டது. பூனை லபக்கென்று மரத்தில் பாய்ந்து உச்சாணியில் ஏறிக்கொண்டது. நரிக்கு தன் நூறு தந்திரங்களில் எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவது என்ற யோசனையில் காலதாமதமாகி மாட்டிக் கொண்டு உயிர் துறந்தது.

"சந்தேகத்துக்குரிய நூறு வழிகளை விட பத்திரமான ஒரு வழியே மேல்"

செல்வி.உ.தாரிகா
தரம் - 04

நரியும் கழுதையும்

இருளான நேரத்தில் நரி ஒன்று காட்டுவழியாக செல்லும் போது ஆழமான கிணற்றில் தவறி விழுந்து விட்டது. இந்த கிணற்றிலிருந்து எப்படி வெளியேறுவது என்று செய்வதறியாது தவித்தது. கிணற்றுக்குள் இருந்து நரி உதவி கேட்டுக் கத்த ஆரம்பித்தது. அப்போது அவ்வழியாக வந்த கழுதை ஒன்று ஏன் கிணற்றுக்குள் இருந்து கத்துகிறாய் என்று நரியைப் பார்த்துக் கேட்டது. அதற்கு நரி இந்தக் கிணற்று நீர் தேனாக இனிக்கிறது. எனவே அந்த நீரைப் பருக யாரையாவது அழைக்கிறேன் என்றது. இதைக்கேட்ட கழுதை எனக்கு இந்த கிணற்று நீரைப்பருக ஆசையாகவுள்ளது எப்படி நீரைப்பருகுவது என்று அப்பாவியாகக் கேட்டது. நீ வாளியில் கட்டியிருக்கும் கயிற்றை கிணற்றுக்குள் போடு அதை நான் பிடித்துக் கொள்கிறேன் அதன் பிறகு நீ வாளியினுள்ளே இறங்கு மெதுவாக கிணற்றுக்குள் வந்து விடு என்றது நரி. அதன் படி கழுதை வெளியிலிருந்த கயிற்றை கிணறறுக்குள் போட நரி தப்பித்தோம் பிழைத்தோம் என அவ்விடத்தை விட்டு ஓடிச்சென்றது. வாளிக்குள்ளிருந்து கழுதை செய்வதறியாது கிணற்றுக்குள்ளேயே பரிதவித்தது.

" தீயவர்களுக்கு உதவி செய்ய நினைத்தால் இறுதியில் ஆபத்தே விளையும்"

செல்வன். த.அபிஷன்
தரம் - 04

சிறுவர் தினம் (ஒக்டோபர் 1)

"கண்ணே எழுந்திடுவாய் - கண்மணியே கண் மலர்வாய்
சின்னஞ் சிறுகிளியே - தூயில் நீங்கி நீ எழுவாய்"

ஆம்!

பத்து மாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி வளர்த்த அன்னைக்கும், தோள் மீது சுமந்து தேற்றி அரவணைக்கும் தந்தைக்கும் கண்ணாக, பொன்னாக, முத்தாக, மணியாக ஏன்? உயிராகக் கூட உறவாடி மகிழும் உண்மை உருவங்கள் அவர்கள்

பிள்ளைகள் என்றால் அதை யாரும் மறக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. மடி மீது தாம் சுமந்த பிள்ளை மண்ணிலே முழு மனிதனாகப் பார் போற்ற வாழ வேண்டும் என்பது தான் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரதும் அழியாத ஆவல். இந்த அழியாத ஆசையை ஈடேற்றி விடத்துடிக்கும் பல பெற்றோர்கள் உரிய வழிகளில் இவற்றைக் கொண்டு உச்சத்தை அடைந்தாலும் பிள்ளைகளது வாழ்வை உயர்த்துகின்றோம் என்றெண்ணி உயர்ச்சிக்கும் உலை வைக்கும் எத்தனை எத்தனையோ பெற்றோர்கள் பிறப்பெடுத்துக் கொண்டே தான் இருக்கிறார்கள் என்றால் அதை யாரும் மறப்பதற்கில்லை. நவீனத்துக்குள்ளே சிக்குண்டு போன மனிதன் நாள் தோறும் நாகரிகம் என்ற போர்வைக்குள் சிக்குண்டு தம்மை அழித்து வரும் அதே வேளை நாளைய நாட்டின் கண்களாக விளங்க வேண்டிய சிறார்களின் வாழ்வையும் அழித்து நாசமாக்கி வருகின்றது.

இன்றைய பெற்றோர்கள் பலர் தங்களது பிள்ளைகள் நவீனத்துவத்தை எட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு நவீன தொடர்பு சாதனங்களுக்குள் மூழ்கடிக்கும் போதும் அவர்களும் அதுவே தஞ்சம் என்று எண்ணி தளர்த்து விடுகின்றனர்.

இன்றைய நவீன உலகம் இவ்வாறிருக்க எதில்காலத்தில் கல்வி, விளையாட்டு, கலை போன்ற சகல துறைகளையும் மறந்து இவற்றிலே மூழ்கிப் போவதால் பொன்னான இவர்கள் எதிர்காலம் புதைகுழிக்குள் தள்ளப்படுவதோடு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என்ற வெளி உலக உறவுகள் துண்டிக்கப்படுகிறது.

ஏன்? பல்வேறு சந்தர்ப்பங்களில் உட்புறச் சூழலில் கூட இவர்கள் உறவு துண்டிக்கப்படுகிறது. நவீன உலகத்துள் தங்கள் வறுமையைப் போக்க தங்கள் சுகங்களுக்காய் பிள்ளைகளது வாழ்விற்கு தீனிபோடும் பெற்றோர்களும் இன்னும் இருக்கத்தான் செய்வார்கள். தங்களது குடும்ப வறுமையைப் போக்க அவர்களது சின்னஞ்சிறார்களை வேலைக்கும் சேர்த்து விடுகின்றார்கள். இதனால் கல்வி அறிவு அற்றவர்களாய் ஏக்கமும் ஏமாற்றமும் நிறைந்த ஒரு

மனிதனாய் தனது நாளாந்த வாழ்க்கையை நகர்த்த முடியாத அளவிற்கு நலிவடைந்து போகின்றான்.

பேனா பிடித்து கனாக்காண வேண்டிய கள்ளமற்ற வயதில் கல்லுடைத்தும், கதிர்கொய்தும் காலத்தைப் போக்க வேண்டிய கட்டாய நிலையில் கண்ணீரோடு வாழும் எத்தனையோ சிறுவர்களது வாழ்வு கேள்விக்குறியாகி நிற்கின்றது. அதுமட்டுமல்லாது போதைப் பொருளுக்கு அடிமையாவது, பாலியல் துஷ்பிரயோகங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதும், துன்புறுத்துவதும் இன்று அதிகரித்துள்ளதை நாம் அறிய முடிகின்றது.

எனவே இன்றைய சிறார்கள் நாளை எமது நாட்டின் நல்ல தலைவர்களாக மிளிர்வதற்கு சிறுவர்களை சீரழிக்காது துல்லியமான, ஒளிமயமான எதிர்காலம் இவர்களுக்கு கிடைக்க சிறுவர் தினத்தில் சிறுவர்களை குழந்தை தெய்வங்களாக மதித்து நடப்போம் என உறுதி பூணுவோம்.

இளமைப் பெயர்

* அணில் - குஞ்சு/பிள்ளை
* ஆடு - குட்டி
* பாம்பு - குட்டி
* குரங்கு - குட்டி/பறள்
* யானை - போதகம்
* மான் - கன்று
* பன்றி - பறள்/குட்டி
* பூனை - குட்டி/பறள்
* குதிரை - குட்டி
* தவளை - பேத்தை
* சிங்கம் - குருளை/குட்டி
* புலி - குருளை/குட்டி
* கோழி - குஞ்சு
* மீன் - குஞ்சு

* கிளி - பிள்ளை/குஞ்சு
* கீரி - பிள்ளை
* முயல் - குட்டி
* நாய் - குட்டி
* மாடு - குட்டி
* ஒட்டகம் - கன்று
* கழுதை - கன்று
* எருமை - கன்று

செல்வி.வி.பிரவீனா
தரம் - 04

எதிர்க்கருத்துச் சொற்கள்

* அந்தரங்கம் - பகிரங்கம்
* அர்த்தம் - அநர்த்தம்
* அழகு - அலங்கோலம்
* அறிவிலார் - அறிவாளி
* இக்கரை - மறுகரை/அக்கரை
* இழிவான - உயர்வான
* ஆரோகணம் - அவரோகணம்
* ஆதரவு - அநாதரவு
* எரிதல் - அணைதல்
* உலோபி - வள்ளல்
* ஏமாற்றம் - நம்பிக்கை
* கர்வம் - பணிவு
* கருமை - வெண்மை
* கோபம் - சாந்தம்
* சாத்தியம் - அசாத்தியம்
* சிரத்தை - அசிரத்தை
* சௌக்கியம் - அசௌக்கியம்
* தண்டனை - மன்னிப்பு
* சகுணம் - அபசகுணம்

* குற்றவாளி - நிரபராதி/சுத்தவாளி
* சின்னஞ்சிறிய - பென்னம்பெரிய

செல்வி.சு.கோயிதா
தரம் - 04

சிந்தனைக்கு சில

* எம்மை ஏமாற்றாத நல்ல நண்பன் புத்தகம்
* எல்லோரிடமும் நன்றி விசுவாசத்துடன் இருப்பவனுக்கு இறைவன் நல்லாசி உறுதியாகக் கிடைக்கும்.
* வாழ்க்கையில் ஒரு தெளிவு வருவதற்கு நாம் அதிகம் கலங்கவேண்டி இருக்கிறது.
* சென்ற இடத்தில் மரியாதை கொடுக்கவில்லை என்று கோப்படாதே மரியாதை இல்லாத இடத்துக்கு சென்றதாக வருந்து.
* சினம் கொள்வதால் நிம்மதியை இழக்கிறோம். மௌனம் கொள்வதால் நிம்மதி பெறுகிறோம்.
* நல்லவர்களாக இருப்பதை விட நல்லவர்களாக நடிப்பவர்களே பெரும்பாலும் நல்லவர்கள் என நம்பப்படுகிறார்கள்.

வாழ்க வளமுடன்

வணங்க வேண்டிய தெய்வம் - தாய், தந்தை
மிக மிக நல்ல நாள் - இன்று
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது - பணிவு
மிகவும் வேண்டாதது - வெறுப்பு
மிகக் கொடிய நோய் - பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
நம்பக்கூடாதது - வதந்தி

செய்ய வேண்டியது - உதவி
மறக்கக் கூடாதது - நன்றி

செல்வி.ர.திவ்வியா
தரம் - 04

கவிதை - அம்மா

எத்தனையோ கோடிகளில்
எனக்காய் பிறந்த
பாசம் என்றால் என்ன
என்பதை புரிய வைத்து
என்னை பாசத்தின்
பிடியில் அரவணைத்து
என் அம்மா
துன்பங்களை கஷ்டங்கள்
என எனக்கு வந்த போது
தோளோடு தோள் கொடுத்து
தைரியத்தை கொடுத்த என் அம்மா!

செல்வன்.ஜெ.கஜீபன்
தரம் - 04

ஆச்சரியமான தகவல்கள்

* அன்னாசிப்பழத்திற்கு விதைகள் இல்லை.
* அத்தி,பலா மரங்கள் பூப்பதில்லை.
* அரேபியாவில் ஆறுகள் இல்லை. அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை.
* இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
* உத்தரப் பிரதேசத்தில் தென்னை மரங்களில்லை.
* யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
* ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
* சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.

* ஹாவாய் தீவில் பாம்புகள் இல்லை.
* பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
* நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
* காந்தி அடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
* பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
* மலைப்பாம்புகளுக்கு விசம் இல்லை.
* கிவி பறவைகளுக்கு இறக்கைகள் இல்லை.
* சிங்கமும் புலியும் ஒரே காட்டில் வசிப்பதில்லை.
* யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
* நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
* நண்டுக்கு தலை இல்லை.
* ஆமைக்கு பற்கள் இல்லை.
* வண்ணத்துப் பூச்சிக்கு வாயில்லை.

துண்டுப்பிரசுரம்

மாணவர்களே!

நீரைச்சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்.
நீர் பொன் போன்றது.
நீரை வீண் விரயம் செய்யாதீர்கள்.
காடுகளைப் பாதுகாப்போம்.
நீர்வளம் பெருக்குவோம்.
நாளைய சந்ததியினருக்கும் நீர் அவசியமானது.
ஒரு துளி நீரையும் வீணாக்கதீர்கள்.
மழைநீரைச் சேகரித்துப் பயன்படுத்துங்கள்.

தேசிய நீர் வழங்கல் மற்றும்
வடிகால் அமைப்புச்சபை

பொது அறிவு

01. அதிக நீர் அருந்தும் பறவை?
புறா

02. அடைகாக்கும் ஆண்பறவை
கிவி, பென்குயின்

03. அழகிய கூடு கட்டுவது
தூக்கணாங்குருவி

04. அதிகளவு கால்களைக் கொண்டவை
மட்டத்தேள், அட்டை

05. இரவில் வெளிச்சத்தை வெளிவிடுவது
மின்மினிப்பூச்சி

06. இலங்கையின் தேசிய மலர் எது?
அல்லி

07. இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம்

08. நத்தையில் முட்டையின் நிறம் எது?
மஞ்சள்

09. முத்தமிழ்களும் எவை?
இயல், இசை, நாடகம்

10. உலகின் மிகப்பெரிய நதி எது?
மிசூரி மிசுசிப்பி

11. சர்வதேச தாய் மொழி தினம்?
பெப்ரவரி 21

12. உலகின் மிக உயரமான சிகரம்
எவரெஸ்ட் சிகரம்

செல்வன் த.அபிஷன்
தரம் - 04

இளமைப் பெயர்கள்

* அணில் - குஞ்சு/பிள்ளை
* ஆடு - குட்டி
* கீரி - பிள்ளை
* யானை - போதகம்
* சிங்கம் - குருளை
* காகம் - குஞ்சு
* கோழி - குஞ்சு
* தவளை - பேத்தை
* பாம்பு - குட்டி
* நெல் - நாற்று
* கழுகு - கன்று
* முங்கில - கன்று

செல்வி.க.கோமிதா
தரம் - 04

தொனிகள்

* கரடி - உறுமும்
* தேனீ - ரீங்காரமிடும்
* கழுதை - கத்தும்
* நரி - ஊளையிடும்
* கோழி - கொக்கரிக்கும்
* நாய் - குரைக்கும்
* காகம் - கரையும்
* எருமை - எக்காளமிடும்
* ஆடு - கத்தும்
* மயில் அகவும்
* புறா - குறுகுறுக்கும்
* எருது - முக்காரமிடும்

பழமொழிகள்

* அழுத பிள்ளை பால் குடிக்கும்.
* ஆழம் அறியாமல் காலை விடாதே.
* இக்கரைக்கு அக்கரை பச்சை.
* உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
* காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
* சிறுதுளி பெருவெள்ளம்.
* மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
* யானைக்கும் அடி சறுக்கும்.
* குரைக்கிற நாய் கடிக்காது.
* பேராசை பெருந் தரித்திரம்.
* கோபம் பாவத்தைத் தேடும்.
* ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது.

செல்வி.தேமதுசாளினி
தரம் - 04

பாடல்

மீனினம் ஓடிப் பறக்குதம்மா! - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானுங்கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா!

அம்புயம் வாடித் தளந்ததம்மா! - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்பருலகின் இயல்பிதம்மா! - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா!

சின்னஞ் சிறு வில்லாய்க் கண்டதம்மா! - பின்னாச்
செம்பாற் குடம் போல தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா! - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா - கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா!

குளங்களும் அவற்றை கட்டுவித்த மன்னர்களும்

* அயவாவி (பசவக்குளம்), ஜயவாவி,
* காமினி வாவி - பண்டுகாபயன்
* திஸ்ஸவாவி - தேவநம்பியதீசன்
* மின்னேரியாக்குளம், குறுளுவாவி - மகாசேனன்
* கலாவாவி, மகாதுபவாவி - தாதுசேனன்
* பதவியாக்குளம் - இரண்டாம் முகலன்
* கூர்ந்துவாவி - முதலாம் அக்போ
* கந்தளாய் குளம், கிரித்தலவாவி - இரண்டாம் அக்போ

செல்வி.உ.தாரிகா
தரம் - 04

உலகின் மிகப்பெரியவை

* நீளமான நதி - நைல்நதி
* பெரிய நீர்வீழ்ச்சி - நயாகார
* பெரிய கண்டம் - ஆசியா
* அதிக சனத்தொகை - சீனா
* பெரிய பாலைவனம் - சஹாரா
* பெரய சமுத்திரம் - பசுபிக்
* பெரிய தீவு - கிறீன்லாந்து
* பெரிய நாடு - ரஷ்யா

செல்வி.உ.தாரிகா
தரம் - 04

பலபொருள் ஒரு மொழி

* அரவம் - ஓசை, பாம்பு, ஒலி
* அகம் - மனம், உள்ளம், மனை, இடம்
* ஆடு - நடனம் ஆடு, ஒரு மிருகம்
* ஆண்டு - வருடம், நாடாள்வது, அவ்விடம்
* உடை - ஆடை, உடைத்தல்
* உணவு - ஆகாரம், உண்டி, சாப்பாடு
* கவி - குரங்கு, பாட்டு, புலவன்
* கரி - யானை, அடுப்புக்கரி
* கோ - அரசன், பசு
* சரம் - மாலை, அம்பு
* திங்கள் - சந்திரன், மாதம், கிழமை
* தோற்றம் - காட்சி, பிறப்பு
* வடு - பிஞ்சு, காயம், தழும்பு
* நாடு - தேசம், கண்டம், இடம்
* மதி - சந்திரன், புத்தி, மதித்தல்

செல்வி.உ.தாரிகா
தரம் - 04

எதிர்ப்பாற் சொற்கள்

* அப்பா - அம்மா
* அரசன் - அரசி
* அண்ணா - அண்ணி
* இடையன் - இடைச்சி
* உத்தமன் - உத்தமி
* குருடன் - குருடி
* குமரன் - குமரி
* சிறுவன் - சிறுமி
* பணக்காரன் - பணக்காரி
* பாலகன் - பாலகி

* பிதா - மாதா
* மகன் - மகள்
* மணமகன் - மணமகள்
* மாமா - மாமி

செல்வி.உ.தாரிகா
தரம் - 04

மரங்கள்

மரங்கள் இறைவன் நமக்கு அளித்த கொடை இதுவாகும். இவை மனிதனது வாழ்வினில் பின்னிப் பிணைந்துள்ளன. அதாவது மனிதனது சுவாசச் செயன்முறை, உணவுப்பழக்கம், பல்வேறு தேவைகளையும் விருப்பங்களையும் மனிதன் பூர்த்தி செய்வதற்கு இவை உதவுகின்றன. மரங்களினால் எமக்கு கிடைக்கும் பயன்களாவன.

* மனிதனதும், விலங்குகளினதும் உணவைப் பெறல்.
* தளபாடங்கள், வீடுகள் அமைப்பதற்கு உதவுதல்.
* நோய் அல்லது பிணிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மூலிகை போன்ற இயற்கை மருந்து வகைகளைப் பெறுதல்.
* அலங்காரம், ஏற்றுமதி மற்றும் விழாக்களுக்தேவையான பூக்கள் போன்றவற்றைப் பெறுதல்.

மேற்குறிப்பிட்டவை போன்ற பல்வேறு பயன்களை மரங்கள் எமக்கு அளிக்கின்றன. நான் வாழ்கின்ற சூழலில் தென்னை, பனை போன்ற பயன் தரும் மரங்கள் அதிகம் காணப்படுகின்றன. இந்த மரங்கள் அருகி வருகின்றன. எனவே மாணவர்களாகிய நாம் மரங்களை அழிக்காது மரங்களை மேலும் மேலும் நாட்டி வாழ்வில் வளம் பெறுவோமாக.

மரம் வளர்ப்போம் பயன் பெறுவோம்

செல்வி.ர.ரஜீவா
தரம் - 04

நீர் - கவிதை

இயற்கை தந்த வரங்களிலே
பொழியும் மழையும் ஒன்றாம்.
ஊற்று நீரும் பெறுகின்றோம்
உவப்புடன் பருகுகின்றோம்.

நாட்டின் வளங்கள் அழிகிறது.
கானல் நீராய் ஆகிறது.
அமில மழையும் பொழிகிறது.
அகிலம் அழியப் போகிறதா?

காட்டை அழித்து நாடாக்க
கால மழையும் குறைந்ததுவே
கடலில் சேரும் கழிவுகளால்
கடல் வாழ் உயிர்கள் அழிகிறதே.

மரங்கள் நட்டு மழை பெய்தால்
பசுமைப் புரட்சி தோன்றிடும்
பரவும் வளியும் தூய்மையாய்
பாயும் நீரும் பெருகிடும்.

சிறுவர் தினம் - கவிதை

நாளைய தலைவர்களே உமக்காய்!

துளிர்விடும் முன்னே
உனக்கு சமாதி,
இன்றைய உலகத்திலே!
உன் மழலைக்கு இல்லை
மயங்கும் இதயங்கள்,
அரக்கர் உடல்களிலே!

நடை பாதை அதிலே
நட்டு வைத்த மரங்களாய் - நீ
நாசகர் கூட்டத்திலே!
வாசம் பெறும் முன்னே
வாடிப் போன மலராய் - நீ
வக்கிர உலகத்திலே!

தாலாட்டுப் பாடிய
தாயவள் உதிரம்,
உன்மேனி வழிந்திடவே!
நீ கைவிட்டுப் போகும்
இவ்வுலகில் அவள் மட்டும்
கண்ணீர் கடல் மீதிலே!

சிந்திக்க மறக்கிறான்,
இன்றைய மானிடன்
நாளை உனதென்பதை!
உனக்காய் குரலெழுப்ப,
இயலாமை முகம் கொண்டு,
ஊமையாய் ஒளிகின்றான்!

விடியல்கள் உனக்கிங்கு,
வரமாக வரவேண்டும் - நீ
விருட்சமாய் வளர்ந்திடவே!
நாளைய உலகு
இளைப்பாற வேண்டும் - உன்
திறமையின் நிழல் தனிலே!

முயற்சி திருவினையாக்கும்

சுப்புரத்தினம் அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. வசதியான குடும்பம். அவன் தந்தை கனகசபை, சுப்புரத்தினத்தை நன்கு படிக்க வைத்து பெரிய அறிவாளியாக ஆக்கவேண்டும் என்று விரும்பினார். ஆனால்

சுப்புரத்தினத்தை "படி படி" என்று அவனது பெற்றோர் வற்புறுத்தியும் ஒரு பலனும் அளிக்கவில்லை. பள்ளியில் வகுப்பாசிரியரும், தலைமையாசிரியரும் சுப்புரத்தினம் சரியாகப படித்துத் தேறாவிட்டால் பள்ளியில் இருந்து விலக்கி விடுவோம் என்று பயமுறுத்தினர். சுப்புரத்தினத்தின் நண்பர்கள் எல்லாம் நன்கு படிக்கும் போது அவன் மட்டும் இப்படி இருக்கின்றானே என்று கனகசபை கவலையுற்றார். அவ்வருடம் நடந்த பரீட்சையில் சுப்புரத்தினம் சித்தியடையவில்லை. வீட்டில் அவனது பெற்றோர் நிச்சயம் கண்டிப்பார்கள் என்று பயந்து யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

வெகு தூரம் நடந்ததால் காட்டின் எல்லைப் பகுதியை அடைந்து மிகுந்த களைப்பின் காரணமாக ஒரு மரத்தடியில் படுத்துவிட்டான். சுப்புரத்தினத்தின் பெற்றோர், அவனைக் காணாமல் கவலையடைந்தனர். அவன் படிக்காவிட்டாலும் பரவாயில்லை. வீட்டுக்கு வந்து விட்டால் போதும் என்று கடவுளை வேண்டினர்.

காட்டின் வழியாக வந்த ஒரு பெரியவர், சுப்புரத்தினம் மயங்கிக்கிடப்பதை பார்த்து அவனுக்கு முதலுதவி செய்தார். தன்னிடம் இருந்த தண்ணீரையும் ஆகாரத்தையும் கொடுத்து மயக்கத்தைத் தெளிவித்தார். கண் விழித்த சுப்புரத்தினம், தனக்கு படிப்பு வராததால் தன் பெற்றோர் படும் வேதனையைப் பார்க்கப் பொறுக்காமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகக் கூறி தேம்பித்தேம்பி அழுதான்.

பெரியவர் அவன் தந்தை கனகசபைக்கு வேண்டியவர். ஓய்வு பெற்ற தமிழாசிரியர் "தம்பி சுப்புரத்தினம்....." கவலைப்படாதே. தோல்வியே வெற்றிக்கு முதல் படி. மனம் தளர்ந்து விடாதே "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" ஆரம்பத்தில் தோல்வியுற்று பின்னர் வெற்றியடைந்தவர்கள் பற்றி கூறுகிறேன் கேள்.

செல்வி.ஆ.டானுகா
தரம் - 04

துண்டுப் பிரசுரம்

அபாயம் நெருங்குகிறது

மாணவர்களே!

சூழலைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

* காற்று அசுத்தமாகி வருகிறது.
* நீர் அசுத்தமாகி வருகின்றது.
* இது பற்றிச் சிந்தித்ததுண்டா!
* காற்று எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?
* குப்பைகளை எரிப்பதனால்
* தொழிறசாலைகளில் இருந்து வெளிவரும் புகையால்
* வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையால்
* நீர் எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?
* குப்பைகளை ஆற்றில் கொட்டுவதால்
* பயிர்ச் செய்கையின் போது கிருமிநாசினிகளையும் உரங்களையும் பயன்படுத்துவதால்
* கழிவு நீர் ஆற்றுடன் கலப்பதால்

நீங்கள் நோயாளியாகப் போகிறீர்களா?
இதற்கெல்லாம் காரணம் யார்?
சிந்தியுங்கள் உண்மை புரியும்
சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்.

சூழலைப் பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு

சூழலைப் பாதுகாப்போம்

இன்றைய நவீன உலகில் பல்வேறு வளர்ச்சிகள் நடைபெறுகின்ற போதும் சூழல் பல்வேறு வழிகளில் மாசடைந்து வருகின்றது.

அந்த வகையில் சூழல் வெப்பமடைகின்றது. மண்வளம் குன்றுகின்றது, வளி மாசடைகின்றது. இவ்வனைத்திற்கும் நாமே காரணமாகின்றோம்.

காடுகளை அழிக்கின்றோம். இதனால் மழைவீழ்ச்சி குறைவடைந்து சூழல் வெப்ப மடைகின்றது. செயற்கை இராசாயனப் பசளைகளை இடுவதாலும் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருட்களை நிலத்தில் எரிப்பதாலும் நிலம் மாசடைகின்றது. கிருமிநாசினிகளை தெளிப்பதால் வளி மாசடைகின்றது.

எனவே இராசாயனப்பசளைகளுக்குப் பதிலாக இயற்கை பசளைகளைப் பாவித்தும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை முற்றாக தடைசெய்து எமது நிலம் மாசடைதலை மட்டுமல்லாது நாம் வாழும் சூழலை பசுமை பொங்க அனைவரும் ஒன்று திரண்டு சூழல் மாசடையாது பாதுகாப்போம்.

விடுகதைகளும் விடைகளும்

01. ஊசி போட்டார் வாத்தியார் பாடிக் கொண்டு போகிறார் அவர் யார்?

    நுளம்பு

02. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் யார்?

    தராசு

03. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?

    பென்சில்

04. மழைக்காலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?

    தவளை

05. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
மண்புழு

06. மலை மீது தோன்றினாலும் மண்ணோக்கி விழுந்து வரும் வளையாமல் இசைபாடும் சரித்திரத்தில் இடம்பெறும் அது என்ன?
குடை

07. வட்ட வடிவழகி தண்ணீரில் வாழும் வாடி வதங்கினால் வந்திடுவாள் பந்திக்கு அது என்ன?
தாமரை

08. சீருடை இல்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
நாய்

09. நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப்பிடிக்க ஆளில்லை யார்?
ஆறு

10. வரும் போது வெண்சிவப்பு! வளர வளரத் தகதகப்பு! போகும் போது கடும் சிவப்பு! அது என்ன?
சூரியன்

11. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
செங்கல்

12. கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவன் யார்?
ஆமை

13. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்?
நாட்காட்டி

14. வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?
வியர்வை

15. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பான் அவன் யார்?
பூமி

16. உரிக்க உரிக்கத் தோல் அது என்ன?
வெங்காயம்

17. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் அவன் யார்?
காற்று

18. உயிரில்லாதவன் ஊரூராய்ப் பறக்கிறான் அவன் யார்?
கடிதம்

19. வெள்ளைப் கோயிலுக்கு மஞ்சள் பிள்ளையார் அவன் யார்?
முட்டை

செல்வன்.கி.தருணியன்
செல்வன்.கி.திவ்வியன்
தரம் - 04

விடுகதைகள்

01. வட்டமாய் இருக்கும் ஆழமாய் இருக்கும் எட்டிப் பார்த்தால் உருவம் தெரியும் அது என்ன?
கிணறு

02. வாலுள்ளவன் வானத்தில் பறக்கிறான் அவன் யார்?
பட்டம்

03. மழை பெய்த பின் குடை பிடிப்பான் அவன் யார்?
காளான்

04. கடித்தால் கடிபட மாட்டான் பிடித்தால் பிடிபட மாட்டான் அவன் யார்?
தண்ணீர்

05. செய்த குடத்தில் சுவையான நீர் இருக்கிறது அது என்ன?
இளநீர்

செல்வி.சி.சீர்த்திகா
தரம் - 04

ஒத்த கருத்துச் சொற்கள்

* அகிலம் - பூமி
* அவலம் - பரிதாபம்
* அனல் - நெருப்பு
* ஆபரணம் - அணிகலன்
* ஆயுள் - வாழ்நாள்
* ஆரம்பம் - தொடக்கம்
* ஆலோசனை - புத்திமதி
* இரை - உணவு
* இலட்சியம் - குறிக்கோள்
* தீர்மானம் - முடிவு
* கோபம் - சினம்
* சந்தோசம் - மகிழ்ச்சி
* சிநேகிதம் - நட்பு
* மேகம் - முகில்
* யுத்தம் - போர்
* அடவி - கானகம்
* சீற்றம் - சினம்
* வாய்மை - சத்தியம்
* புனிதம் - தூய்மை
* எழில் - அழகு
* அன்பு - நேயம்
* அருவி - ஆறு
* அண்மை - அருகில்
* ஆயுள் - வாழ்நாள்
* ஆழி - கடல்
* இரத்தம் - குருதி
* ஈகை - கொடை
* உண்டி - உணவு
* உண்மை - சத்தியம்
* ஐயம் - சந்தேகம்
* காடு - வனம்

* தாரகை - நட்சத்திரம்
* மனம் - உள்ளம்
* பிணி - நோய்
* நிதம் - தினமும்
* அம்புயம் - தாமரை
* கானகம் - அடவி
* எழில் - அழகு
* அன்பு - பாசம்
* நாடு - தேசம்
* ஆசிரியர் - குரு
* கடல் - ஆழி
* நூலகம் - வாசிகசாலை
* மரம் - தரு
* சூரியன் - ஞாயிறு
* காடு - வனம்
* வயல் - கழனி

செல்வன்.நா.டிலக்ஷன்
தரம் - 04

ஒத்தகருத்துச் சொற்கள்

* தகவல் - செய்தி
* மனை - வீடு
* புலவன் - கவிஞன்
* பணிவு - அடக்கம்
* சத்தம் - ஒலி
* பூ - மலர்
* கலம் - பாத்திரம்
* தரை - நிலம்

செல்வன்.த.அபிஷன்
தரம் - 04

பழமொழிகளும் கருத்துக்களும்

01. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது
எண்ணியபடி எதுவும் நினைப்பதில்லை.

02. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்.

03. விளையும் பயிரை முளையில் தெரியும்.
ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

04. ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்.
கோபம் வருமிடத்து நிதானம் குறைந்துவிடும்.

05. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை.
இளமையில் பழகும் பழக்கம் முதுமை வரை நிலைத்து நிற்கும்.

06. கோபம் பாவத்தைத் தேடும்.
கோபம் ஒருவனுக்குத் தீமையை ஏற்படுத்தும்.

07. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
முயற்சி செய்தவன் பயன் பெறுவர்.

08. இரக்கப்போனாலும் சிறக்கப்போ.
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

09. பேராசை பெருந் தரித்திரம்.
எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.

10. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
சந்தர்ப்பத்தை தவற விடக்கூடாது.

11. பேராசை பெருநட்டம்.
அதிகஆசை தீமை விளைவிக்கும்.

12. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
ஊக்கம் உள்ளவர் உயர்வு பெறுவார்.

13. சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.
எதனையும் இகழ்ந்து பேசலாகாது.

14. சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

செல்வன்.நா.டிலக்ஷன்
தரம் - 04

நான் சென்ற சுற்றுலா

நானும் எனது குடும்பத்தினரும் பின்னவல சரணாலயத்திற்கு சென்றோம். அங்கே சென்று யானைகள் குளிப்பதை எல்லாம் கண்டு நான் புதுமைப்பட்டேன். பிறகு அங்கே இருக்கும் யால எனும் மிருகக்காட்சிச்சாலைக்கு சென்று மான், மரை, சிறுத்தை, குதிரை, கழுதை, முயல் போன்ற சில மிருகங்களை பார்த்தேன். கொக்கு, நாரை, கோழி, தீக்கோழி, வாத்து, மயில், ஆந்தை போன்ற பறவைகளைக்கண்டு களித்ததுடன் எனது அப்பா பல புகைப் படங்களையும் எடுத்தார். பின் அங்கிருந்து எம்பெக்க தேவாலயத்திற்குச் சென்றோம். அந்த தேவாலயம் மரப்பலகைகளால் செய்யப்பட்டு 700 வருடங்களாக காணப்படுகின்றன என கூறினார். எல்லாவற்றையும் புகைப்படங்கள் எடுத்தோம். பின் மதிய போசணம் சாப்பிட்டு மாலை வீட்டிற்கு வந்தோம். இந்த சுற்றுலாவை என்னால் மறக்க முடியாது. எனது பெற்றோரக்கு நன்றிகள்.

செல்வி.ர.ரஜீவா
தரம் - 04

பொது அறிவு

01. உலகில் வறுமையான நாடு எது?
ருவண்டா

02. விவகாரத்து செய்ய முடியாத நாடு எது?
அயர்லாந்து

03. அந்தமான் தீவுகளின் எண்ணிக்கை?
204

04. உலகில் மின்தடை இல்லாத நாடு எது?
குவைத்

05. கடல் நீர் நீலமாக இருக்கும் அளவு?
10அடி

06. மின்னலின் சராசரி நீளம் யாது?
6Km

07. நத்தைகளில் எத்தனை வகை உண்டு?
80 வகை

08. ஒட்டகம் எத்தனை கிலோ எடையைச் சுமந்து செல்லும்?
300கிலோ எடையை

09. சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் எடுக்கும்?
15ஆண்டுகள்

10. யானையின் தும்பிக்கையில் எத்தனை இலட்சம் தசைகள் உண்டு?
4 இலட்சம் தசைகள்

செல்வி.ர.ரஜீவா
தரம் - 04

இலங்கையின் நதிகளும் அவற்றின் பழைய பெயர்களும்

* மகாவலி நதி - மகாவலுக நதி/ கங்காநதி
* கல் ஓயா - கல்க நதி
* கும்புக்கன் ஓயா - குடிகந்த நதி
* கிரிந்தி ஓயா - கிரிந்தி நதி
* வளவ கங்கை - வளவாகினி நதி
* நில்வள கங்கை - நீலவாகினி நதி

* ஜின் கங்கை - கிங் கங்கை
* களனி கங்கை - கல்யாணி நதி
* தெதுறு ஓயா - ஜஜ்ஜர நதி
* கலா ஓயா - கோண நதி
* மல்வத்து ஓயா - அருவியாறு/ கதம்பநதி
* மாணிக் ககங்கை - கப்பரகந்தநதி

செல்வி.ர.ரஜீவா
தரம் - 04

புன்னகைக்கும் பூக்கள்

வண்ணப் பூக்கள் மலருது பார்!
வாசம் எங்குமே கமழுது பார்!
உண்ணத் தேனை நாடியே ஓடி வண்டு வருகுது பார்!
எண்ணம் கவரும் இதழ்களிலே வர்ண ஜாலம் வழிவது பார்!
முல்லை, மல்லிகை, முத்து வண்ணம்!
சிவப்பு ரோஜா பட்டு வண்ணம்!
பூக்கள் பூமியின் புன்னகையாம்!
புனிதம் நிறைந்த பூக்களைப் பார்!
சடையில் வைத்து பின்னலாம்!
சாமிப் படத்துக்கும் சூட்டலாம்!
சொற்ப நேர வாழ்வினில் உவகையூட்டும் பூக்களே!
அற்பப் பகைமை மறந்திடுவோம் அழகிய பூக்களாய் மலர்ந்திடுவோம்!

செல்வி.ர.ரஜீவா
தரம் - 04

எல்லாமே இரண்டு

01. இரண்டு தடவை சுதந்திரம் பெற்ற நாடு?
சைப்ரஸ்

02. இரண்டு தேசிய கீதங்கள் உள்ள நாடு?
அவுஸ்ரேலியா

03. இரண்டு தேசிய கொடிகள் உள்ள நாடு?
ஆப்கானிஸ்தான்

04. இரண்டு மாநிலங்களுக்கு ஒரே தலைநகரம்
சண்டிகர் :- பஞ்சாப், அரியானா

05. இரண்டு தலைநகரங்களைக் கொண்ட ஒரே மாநிலம்
ஐம்மு காஷ்மீர்

செல்வி.ர.திவ்வியா
தரம் - 04

பொது அறிவு

01. இரும்பு வேலை செய்பவனை எவ்வாறு அழைப்பர்?
கொல்லன்

02. சிலைகள் செதுக்குபவனை எவ்வாறு அழைப்பர்?
சிற்பி

03. மரவேலை செய்பவரை எவ்வாறு அழைப்பர்??
தச்சர்

04. சித்திரங்கள் வரைபவனை எவ்வாறு அழைப்பர்?
ஓவியர்

05. மண் பாத்திரங்கள் வனைபவர் யார்?
குயவர்

06. உலக சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படும்?
ஏப்ரல் 07

07. உலக நீர் தினம் எப்போது கொண்டாடப்படும்?
மார்ச் 22

08. உலக சூழல் தினம் எப்போது கொண்டாடப்படும்?
யூன் 05

09. மின்குமிழை கண்டு பிடித்தவர் யார்?
தோமஸ் அல்வா எடிசன்

10. தொலைபேசியை கண்டு பிடித்தவர் யார்?
அலெக்சாண்டர் கிரகம்பெல்

செல்வி.சு.கோயிதா
தரம் - 04

சேவல் - பாடல்

சேவலைப் பார் சேவலைப் பார்
சிப்பாயைப் போல - அது
கூவுது பார் கூவுது பார்
கொம்பொலி போல
வெற்றி நடை போடுது பார்
வீரனைப் போல போரில்
சுற்றி வந்து அடிக்குது பார்
சூரனைப் போல
வாலையாட்டும் வண்ணத்தைப் பார்
வானவில் போல
அதிகாலையிலே எழுப்பிடும் பார்
காவலன் போல!

செல்வி.தே.மதுசாளினி
தரம் - 04

Action Song

Hop a little, Jump a Little
One, Two, Three:
Run Little, Skip a Little
Top one knee:
Bend a little, stretch a little,
Nod your head:
Yown little, sleep a little
In your bed.

Miss.K.Piriththika
Grade - 04

இயல்பது கரவேல்

சேர். பிலிப் ஸிட்னி உலக புகழ்பெற்ற போர் வீரர் ஆவார். அவர் எதிரிகளுடன் யுத்தம் செய்து காலத்தில் குண்டடிபட்டு பலத்த காயமுற்று கீழே விழுந்து விட்டார்.

அந்த வேளையில் அதிக களைப்பினால் அவருக்கு தாங்கமுடியாத அளவு தண்ணீர் தாகமெடுத்தது. அதனால் அவரின் அந்த தாகத்தை தணிக்கவென்று பல இடங்களிலும் தண்ணீரைத் தேடி கடைசியில் வெகு தூரத்தில் இருந்து கொஞ்சம் தண்ணீரை கொண்டு வந்தனர்.

அவர் அந்த நீரை அருந்தப்போகும் போது அவரின் அருகே படுகாயமடைந்து கிடக்கும் படைவீரன் ஒருவன் பார்ப்பதை கண்டார். சேர்.பிலிங் ஸிட்னி

உடனே அவர் தன்னுடைய தாகத்தையும் பொருட்படுத்தாமல் தனக்கு கொண்டு வந்த தண்ணீரை அந்த வீரனுக்கு கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

அந்த மரண அவஸ்தையிலும் தன்னால் இயன்றதை ஒளிக்காமல் உதவிய ஸிட்னி அவர்களின் நற்குணத்தைக் கண்ட சகவீரர்கள் உள்ளம் குளிர்ந்தது. அவரின் பெருமை எக்காலத்திலும் இவ்வுலகில் நிலைபெற்று நிற்கும் என்று வாழ்த்தினர்.

நீதி - இல்லையென்னாமல் கொடுக்கும் பெருமை உலகத்தில் அழியாமல் நிலைபெறும்.

செல்வி.க.சார்மிகா
தரம் - 04

காகத்தை ஏமாற்றிய நரி

காகம் ஒன்று வடையைத் தூக்கிச் கொண்டு பறந்தது. ஒரு மரக்கிளையின் மீது அமர்ந்தது. பிறகு அந்த வடையை ஆசையுடன் தின்ன எண்ணியது.

அப்போது அவ்வழியே சென்ற நரி காகம் வடையுடன் இருப்பதை பார்த்து விட்டது. என் உயிர் நண்பனே! நீ எவ்வளவு அழகாக இருக்கறாய் தெரியுமா? உன் குரல் இனிமையாக இருக்கும். தயவு செய்து ஒரு பாட்டைப்பாடு என்று ஆவலாகாக் கேட்டது. காகமும் வாயைத் திறந்து மகிழ்ச்சியுடன் "கா....கா" என்று கரைந்தது. வடையும் கீழே விழுந்தது.

கீழே விழுந்த வடையைத் தனது வாயினால் கவ்விக் கொண்டு தந்திர நரி ஓடிவிட்டது.

"நீதிக்காரர்களின் பேச்சை நம்பாதே"

செல்வன்.ச.சாதுர்ஜன்
தரம் - 04

பல விதைகளை கொண்ட பழங்கள்
Fruits with Many Seeds

பலா	- Jack
பப்பாசி	- Papaw
அப்பிள்	- Apple
கொய்யா	- Guava
திராட்சை	- Grapes
மாதுளை	- Pomegranate
தோடை	- Orange

செல்வி.சு.கோயிதா
தரம் - 04

இலங்கையின் முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

110 - அம்புலன்ஸ்
111 - தீயணைப்பு
114 - ஸ்ரீலங்கா ஆமி தலைமை விமான படை
116 - ஸ்ரீலங்கா விமான படை
117 - அனர்த்த முகாமைத்துவம்
118 - பாதுகாப்பு அமைச்சர்
119 - அவசர பொலிஸ்
1900 - Tele Communication Regulatory
1901 - Ministry of Power and Energy
1905 - Ministry of Power and Public Administrate
1910 - Lanka Electricity Comopany
1911 - பரீட்சைத் திணைக்களம்
1912 - சுற்றுலாத்துறை
1918 - உயர்கல்வி அமைச்சு
1919 - தகவல் திணைக்களம்
1920 - விவசாய சேவை நிலையம்
1922 - State Mortage and Inversment Bank

1929 - சிறுவர் உதவி
1933 - Police Department
1938 - மகளிர் விவகாரம்
1939 - நீர்ப்பாசனத்துறை
1948 - போதைப்பொருள் ஆலோசனை
1954 - லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு

මගේ ගම - எனது ஊர்

01. මගේ ගම වරණි
எனது ஊர் வரணி

02. මගේ ගම ලස්සනයි
எனது ஊர் அழகானது

03. ගමේ පවුල් හත්තෑවක් විතර පිවින් වෙතවා
இங்கு 70 குடும்பங்கள் வசிக்கின்றனர்.

04. ගණ දෙවිස න්ගේ පිළම නයෙනවා
இங்கு பிள்ளையார் கோவில் இருக்கிறது.

05. ගමේ ඉන්නඅය හරිම ඒකමු නුයි
இவ்வூரில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கின்றனர்

06. මගේ ගමේ පාසල තයෙනවා
எனது கிராமத்தில் பாடசாலை உண்டு

01. සඳූදා - திங்கள்
02. අඟහරුවාදා - செவ்வாய்
03. බදාදා - புதன்
04. බ්‍රහස්පතින්දා - வியாழன்
05. සිකුරාදා - வெள்ளி
06. සෙනසුරාදා - சனி
07. ඉරිදා - ஞாயிறு

செல்வி.ர.ரஜீவா ர. ரஜீவா
தரம் - 04

சில துணுக்குகள்

* நாம் வாழ்வில் செய்யும் மிகப் பெரிய சாதனை பிறரை வேதனை செய்யாது வாழவதே!

* அடுத்தவர் தவறுகளை மன்னிக்கத் தயங்காதே! அந்த மன்னிப்பு நாளை உனக்கும் தேவைப்படும்.

* நமக்காகக் காத்திருக்கும் அன்பும் நம்மைக் காக்கவைக்கும் அன்பும் என்றைக்கும் உண்மையானது.

* வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருக்கட்டும்.

* வாழ்க்கையில் ஏதேனும் சில தருணங்கள் நமக்கு உணர்த்தும், நாம் தவறவிட்ட நேரங்களை.

* கற்கும் வயதில் நீ கற்றிடு கல்வியை. காலம் யாவும் அது கொடுத்திடும் நன்மையை.

* உறுதிகொள் மனதில் கடவுளை நம்பி உன் மனம் போகாது தீமையை எண்ணி.

* நினைக்கும் எண்ணங்கள் நல்லவையாக இருப்பின் நடக்கும் விடயங்களும் நல்லவையாகவே நடக்கும்.

பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால் - அதனை சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு - அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் - அதனை கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் - அதனை தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு விநோதம் - அதனை கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் - அதனை பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் - அதனை புகழுடன் முடித்துக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதிமொழி - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு - அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் - அதனை விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப் பிடியுங்கள்

J/ KARAMBAIKURICHCHY G.T.M.SCHOOL
Grade - 04 Students Details

01. Jekanathan Kajeepan
02. Vimalraj Sansikan
03. Selvarajah Sathurjan
04. Nakenthiran Dilaxsan
05. Krishnaruban Tharuniyan
06. Krishnaruban Thivviyan
07. Thavakulasingam Abishan
08. Suthakar Koyitha
09. Karunakaran Sarmika
10. Sinnathambi Seerthika
11. Arumugam Danuka
12. Uthayakumar Tharika
13. Rameswaran Thivviya
14. Viji Piravina
15. Kamalathasan Piriththika
16. Thevanayakam Mathusaliny
17. Ratheeskumar Rajeeva



அனுசரணை :- பெரியதம்பி கங்காகரன்